





श्रीमत् वेदान्त रामानुज मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् श्रीवास योगीश्वर गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रीरङ्गनाताह्वय मुनिकृपया प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् वेदान्त रामनुज मुनिमपरम् संश्रये देशिकेन्द्रम्



श्रीमत् श्रीवास योगीश्वर मुनि करुणालब्ध वेदान्त युग्मम्
श्रीमत् वेदान्त रामानुज गुरुपदयोर्पित स्वात्मभारम्
श्रीमत् श्रुत्यन्त रामानुज यति नृपतेः प्राप्त मोक्षाश्रमं तं
श्रीमत् श्रीवास रामनुजमुनिं संश्रये ज्ञानवार्धिम्



वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपात्त बोधम्
तत्पाद युग्म सरसीरुह भृङ्गराजम्
त्रय्यन्त युग्म कृतभूरि परिश्रमं तं
श्रीरङ्ग लक्ष्मणमुनिम् शरणं प्रपद्ये

# பூச்சூட்டல்

*pUchchUttal*

# பூச்சூட்டல்

## ஸ்ரீ பெரியாழ்வார் அருளிச்செய்த

*ஆநிரை மேய்க்க நீ போதி*
*அருமருந்து ஆவது அறியாய்*
*கானகம் எல்லாம் திரிந்து*
*உன் கரிய திருமேனி வாட*
*பானையில் பாலைப் பருகிப்*
*பற்றாதார் எல்லாம் சிரிப்ப*
*தேனில் இனிய பிரானே*
*செண்பகப் பூச் சூட்ட வாராய்* [1] [0182]

கருவுடை மேகங்கள் கண்டால்
உன்னைக் கண்டால் ஒக்கும் கண்கள்
உருவுடையாய் உலகு ஏழும்
உண்டாக வந்து பிறந்தாய்
திருவுடையாள் மணவாளா
திருவரங்கத்தே கிடந்தாய்
மருவி மணம் கமழ்கின்ற
மல்லிகைப் பூச் சூட்ட வாராய் [2] [0183]

மச்சொடு மாளிகை ஏறி
மாதர்கள் தம் இடம் புக்கு
கச்சொடு பட்டைக் கிழித்துக்
காம்பு துகில் அவை கீறி
நிச்சலும் தீமைகள் செய்வாய்
நீள் திருவேங்கடத்து எந்தாய்
பச்சைத் தமனகத்தோடு
பாதிரிப் பூச் சூட்ட வாராய் [3] [0184]

தெருவின் கண் நின்றிள ஆய்ச்சி மார்களைத்
தீமை செய்யாதே
மருவும் தமனகமும் சீர்
மாலை மணம் கமழ்கின்ற
புருவம் கருங்குழல் நெற்றி
பொலிந்த முகில் கன்று போலே
உருவம் அழகிய நம்பீ
உகந்திவை சூட்ட நீ வாராய் [4] [0185]

# பூச்சூட்டல்

புள்ளினை வாய் பிளந்திட்டாய்
        பொரு கரியின் கொம்பு ஒசித்தாய்
கள்ள அரக்கியை மூக்கொடு
        காவலனைத் தலை கொண்டாய்
அள்ளி நீ வெண்ணெய் விழுங்க
        அன்ஞ்சாது அடியேன் அடித்தேன்
தெள்ளிய நீரில் எழுந்த
        செங்கழுநீர் சூட்ட வாராய் [5] [0186]

எருதுகளோடு பொருதி
        ஏதும் உலோபாய் காண் நம்பி
கருதிய தீமைகள் செய்து
        கஞ்சனைக் கால்கொடு பாய்ந்தாய்
தெருவின் கண் தீமைகள் செய்து
        சிக்கென மல்லர்களோடு
பொருது வருகின்ற பொன்னே
        புன்னைப் பூச் சூட்ட வாராய் [6] [0187]

குடங்கள் எடுத்தேற விட்டுக்
        கூத்தாட வல்ல எம் கோவே
மடங்கொள் மதி முகத்தாரை
        மால்செய்ய வல்ல என் மைந்தா
இடந்திட்டு இரணியன் நெஞ்சை
        இரு பிளவாக முன் கீண்டாய்
குடந்தைக் கிடந்த எம் கோவே
        குருக்கத்திப் பூச் சூட்ட வாராய் [7] [0188]

சீமாலிகன் அவனோடு
        தோழமை கொள்ளவும் வல்லாய்
சாமாறவனை நீ எண்ணிச்
        சக்கரத்தால் தலை கொண்டாய்
ஆமாறறியும் பிரானே
        அணி அரங்கத்தே கிடந்தாய்
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்
        இருவாட்சிப் பூச் சூட்ட வாராய் [8] [0189]

# பூச்சூட்டல்

அண்டத்தமரர்கள் சூழ
        அத்தாணியுள் அங்கிருந்தாய்
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்
        தூமலராள் மணவாளா
உண்டிட்டு உலகினை ஏழும்
        ஓர் ஆலிலையில் துயில் கொண்டாய்
கண்டுநான் உன்னை உகக்கக்
        கருமுகைப் பூச் சூட்ட வாராய் [9] [0190]

*செண்பக மல்லிகையோடு*
        *செங்கழுநீர் இருவாட்சி*
*எண் பகர் பூவும் கொணர்ந்தேன்*
        *இன்று இவை சூட்ட வாவென்று*
*மண் பகர் கொண்டானை*
        *ஆய்ச்சி மகிழ்ந்துரை செய்த இம் மாலை*
*பண் பகர் வில்லிபுத்தூர்க் கோன்*
        *பட்டர்பிரான் சொன்ன பத்தே* [10] [0191]